[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 நவம்பர் 24

தலைகீழாக மாறி இருக்கிறது, மாறுபட்ட சூழ்நிலையில் பழைய ஆர்டினன்ஸை சட்டமாக்க ஒரு பில் கொண்டுவந்து விடுகிறோம் என்று சொல்வது நியாயமாக இருக்காது. இப்பொழுது சூழ்நிலை மாறிவிட்டது.

They can bring a fresh Bill again to be considered by the House. The Hon. Minister can withdraw the Bill under Rule 121 of the Assembly Rules.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எனக்கு இது சரியாகப் புரிய வில்லை. மசோதா கொண்டுவரும்போதே இப்படித்தான் கொண்டு வந்திருக்கிறோம். புதிய மசோதா தான் கொண்டுவரப்பட்டிருக் கிறது. இதை வாபஸ் செய்து விட்டு, வேறு ஒன்றைக் கொண்டு வரவேண்டுமென்ற அவசியம் இல்லை. சட்டம் தனியாக இருக் கிறது. இதைக் கைவிட்டுவிட வேண்டுமென்றால் மாநகர மன்றம் என்ன ஆகும் என்பதை, யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த மசோதாவிலே நாம் நவம்பர் 30-ந் தேதி வரையில் மாநகர மன்றம் நடைபெறும்; அதற்குப் பிறகு ஸ்பெஷல் ஆபீசர் போடப்படுவார் என்று இருக்கிறது. அந்த அதிகாரியினுடைய அதிகாரம் என்ன என்பதையும் சொல்லியிருக்கிறோம். இந்த மசோதா புதிய மசோதாதான். இதில் தவறு இல்லை. ஆகவே, வேறு ஒரு மசோ தாவைக் கொண்டுவரவேண்டியதில்லை. பழைய மசோதாவில் மே வரையில் மாநகர மன்றம் இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். புதிய மசோதாவில் நவம்பர் 30-ந் தேதி வரையில் இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். ஆக, பழைய மசோதாவுக்கும் புதிய மசோ தாவுக்கும் சட்ட ரீதியில் முரண்பாடு எதுவும் இல்லை. ஆகவே, இந்த மசோதாவை கைவிட வேண்டிய அவசியம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : There is no point of order.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1973-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவாவர்களே, 1973-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

1973 நவம்பர் 24]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நிகழ்ச்சி நிரலில் தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அனுமதி கோருவார் என்று இருக்கிறது. ஆனால்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் நான் தொழில் அமைச்சர் அனுமதி கோருவார் என்று குறிப்பிட்டுச் சொன்னேன்.